[1981 ஏப்ரல் 1

டிஜிட்டல் எலக்ட்ரானிக் கைக்கடியாரங்களுக்கான உதிரிப் பாகங்கள் தயாரித்தல்.

*குறுகிய கால வினா எண். 11—திரு. கு. அ. செங்கோட்டையன் : மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் டிஜிட்டல் எலக்ட்ரானிக் கைக் கடிகாரங்களுக்கான லிக்யூட் கிரிஸ்டல் டிஸ்ப்ளே பேனல்ஸ் (Liquid Crystal Display panels for Digital Electronic Watches) தயாரிக்க உரிமம் கோரி இந்துஸ்தான் மெஷீன் டூல்ஸ் (Hindustan Machine Tools) நிறுவனம் விண்ணப்பித்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அது தற்போது எந்த நிலையில் உள்ளது ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :—(அ) ஆம்.

(ஆ) மைய அரசு இந்துஸ்தான் மெஷின் டூல்ஸ் விண்ணப்பத்தினை நிராகரித்துள்ளது.

திரு. கு. அ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார்களினால் துவக்கப்படவேண்டும் என்று அனுமதி கேட்கப்பட்டிருக்கிற இந்தத் தொழிற்சாலைக்கு என்ன காரணத்தை வைத்து மத்திய அரசு அனுமதி மறுத்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு தலைவர் அவர்களே, பெங்களூரில் இருக்கும் எச். எம். டி. நிறுவனம் தான் அந்த அனுமதியைக் கேட்டிருக்கிறது. அது மத்திய அரசின் நிறுவனம்தான். பெங்களூருக்குப் பக்கத்தில் தர்மபுரி மாவட்டத்தில் ஹோசூரில் இந்தப் பிரிவை ஏற்படுத்த அந்த நிறுவனம் அனுமதி கேட்டிருந்தது. நான் சமீபத்தில் சென்றிருந்தபோது கூட, மத்திய அரசின் பொறுப்பிலே உள்ள அத்தனை சம்பந்தப்பட்டவர்களையும் பார்த்து இது பற்றி முயற்சி செய்தேன். மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் கூட இது பற்றி கடிதங்கள் எழுதியிருக்கிறார்கள். ஆனால் நமக்கு ஒரு வாரத்திற்கு முன்னாலே இது பற்றி வந்திருக்கக் கூடிய கடிதத்தில், விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டது, ஏற்றுக் கொள்ளப்பெறவில்லை என்று தான் இருக்கிறது இருந்தாலும் கூட மீண்டும் மீண்டும் தமிழக அரசு, எச். எம். டி. நிறுவனத்தின் தொழிற்சாலையை ஹோசூரில் ஏற்படுத்துவதற்கு அனுமதி பெற முயற்சிக்கும் என்று கூறிக்கொள்கிறேன்.

1981 ஏப்ரல் 1]

திரு. கோவைத்தம்பி : தலைவர் அவர்களே, மத்திய அரசு பாலியஸ்டர் நாரிழையினைத் தொழிற்சாலைக்கு அனுமதிஇங்கு இல்லை என்று சொல்கிறார்கள். அதே போல் எச். எம். டி. நிறுவனத்தின் பிரிவை தமிழ் நாட்டில் உருவாக்க அனுமதி இல்லை என்றுசொல்கிறார்கள். மத்திய அரசு தமிழகத்திற்கு மறுப்பதற்குக் காரணம் இங்கே சீதோஷ்ணநிலை இல்லையா? இல்லை தொழில் கூடங்கள் அமைப்பதற்குள்ள மூலப் பொருள்கள் இல்லையா எந்த அடிப்படையில் மத்திய அரசு இவைகளையெல்லாம் மறுக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் விளக்குவார்களா ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : எல்லா சீதோஷ்ண நிலையும் தமிழ்நாட்டில் சரியாகத்தான் இருக்கிறது. ஆனால் ஏனோ மறுக்கப்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள் — விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.— ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி யிடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்

அ. உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள்.

திரு. எஸ். டி. உகம்சந்த் : தலைவர் அவர்களே, நான் சட்டமன்ற உறுப்பினர் திருமதி யசோதா அவர்கள் மீதும், பாராளுமன்ற உறுப்பினர் திரு. அன்பரசு மீதும்.......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதையெல்லாம் இங்கே கேட்கக் கூடாது.

திரு. து. புருஷோத்தமன் : தலைவர் அவர்களே, நான் இதைக் கேட்பதற்கு மிகவும வெட்கப்படுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்கப்படுவதை கேட்பானேன் ?

திரு. து. புருஷோத்தமன் : மற்றவர்களுக்கு வெட்கம் வர வேண்டும் என்பதற்காகத்தான் சொல்கிறேன். நான் வேதனைப் படுகிறேன். ஜீரோஹவரில் கேட்டுக்கொண்டே இருக்கிறேன். ஒரு குறுகிய கால வினாவிற்கு, கொடுத்து ஒன்பது மாதங்களாகி விட்டன. நாங்கள் தங்களிடம் தான் கேட்கவேண்டும். கேட்கிறேன். ஒரு ஷார்ட் நோட்டீஸ் க்வஸ்டினுக்கு ஒன்பது மாதங்களாகும் என்றால் நிச்சயமாக நீங்கள் எங்களைப் போல......

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS